செய்தி வெளியீடு எண்: 863 நாள்:12.11.2020

# செய்தி வெளியீடு

தமிழக அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் கீழ் இயங்கும் அண்ணா மேலாண்மை நிலைய பயிற்சி மையத்தின் பயிற்சி நிறுவனமாகிய அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம் இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28 இல் இயங்கி வருகிறது. தமிழக அரசின் முதன்மையான நோக்கமாகிய தமிழக மாணவர்கள் அதிகம் பேர் அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன் இயங்கி வருகிறது. இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அரசால் இலவசமாக தங்கும் அறையும் தரமான உணவும் வழங்கப்படுகிறது. மேலும் மத்திய பணியாளர் தேர்வாணைய பாடத்திட்டத்தின்படி சிறந்த அனுபவம் உள்ள பேராசிரியர்கள் மற்றும் அகில இந்தியக் குடிமைப் பணியில் தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் குடிமைப் பணிகள் முதன்மைத் தேர்வு பயிற்சிக்கான ஆன்லைன் வகுப்புகள் 05.10.2020 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, இவ்வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும் என்று கூடுதல் தலைமை செயலர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். குடிமைப் பணிகள் முதன்மை தேர்வு பயிற்சி வகுப்புக்காக 79 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு 11.11.2020 புதன்கிழமை அன்று கூடுதல் தலைமை செயலர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் திரு. வெ. இறையன்பு, இஆப., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பு உரையாற்றிப் பயிற்சி வகுப்பைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் "இந்தியாவை உருவாக்கும் இளைஞர்கள் நீங்கள்; உங்கள் வெற்றி இந்தத் தேசத்தின் வெற்றி" என்றார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் பயிற்சித் துறைத் தலைவர், திரு. எஸ். இராஜேந்திரன், முதல்வர் முனைவர். ஆர். இராமன், அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம், மற்றும் நிகழ்ச்சி மேலாளர், திரு. சுந்தரராஜன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

கூடுதல் தலைமைச் செயலர்/ இயக்குநர்,
பயிற்சித் துறைத் தலைவர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9